**இலங்கை சட்ட உதவி ஆணைக்கும் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் இலங்கை சனநாய சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

குழுவின் அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

குழுவின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழுவின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிலையத்தினால் பேணுதல் அத்தியாவசதியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுப்பிரிவு கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| சம்பந்தப்பட்ட நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுப் பிரிவு கணக்கீட்டு நியமம் 07 இல் 65 ஆவது பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலத்தினை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறாக முழுமையாக தேய்மானம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தற்போதும் கூட பாவனை செய்யப்படுகின்ற கிரயம் ரூபா 5,900,625 ஆன 02 வாகனங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் வீட்டு தளபாட பொருட்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீட்டினை இலங்கை பொதுப்பிரிவு கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள் பரிசீலனை செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மய்க்ரோ வாகனத்தினை (ரூபா 3,173,333) பாவனை செய்ய முடியாது உள்ளடதுடன் இது தொடர்பாக அமைச்சின் பரிந்துரைப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். YL 1947 முச்சக்கர வண்டியின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வருடத்தில் இது திருத்தப்படும். அலுவலக உபகரணங்கள் மற்றும் வீட்டு உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்களை திருத்துவதற்கு அதிக பணம் செலவு செய்ய வேண்டி இருப்பதால் அவ்வாறு செய்யப்படவில்லை. | இலங்கை பொதுப்பிரிவு கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 04 வாகனங்களை மீள் மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டமையினால் ஏற்பட்டிருந்த ரூபா 1,900,000 மீள் மதிப்பீட்டு இலாபத்தினை, மீள் மதிப்பீட்டு ஒதுக்க கணக்கிற்கு சேர்க்கப்படல் வேண்டியதற்குப் பதிலாக அதனை வருடத்தின் ஒதுக்கல் செலவிலிருந்து கழிக்கப்பட்டு காட்டியுள்ளமையினால் வருடத்தின் இலாபம் அப்பெறுமானத்திலிருந்து கூடுதலாகவும் மீள் மதிப்பீட்டு ஒதுக்கலினை அவ்அளவினால் குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் காணப்பட்டன. | ரூபா 1,900,000 இலாபத்தினை மீள் மதிப்பீட்டு ஒதுக்கவினைக்கு சேர்க்கப்பட்டு தேய்மான செலவினத்தை இவ்வருடம் மாற்றப்படும். | கொடுக்கல் வாங்கலினை பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். |
| (ஆ) | முழுக்க தேய்மானமின்றி முடித்திருந்த 02 மோட்டார் சைக்கிள்களின் ரூபா 500,000 மீள் மதிப்பீட்டு பெறுமதியினை உரிய சொத்துக்கான கணக்கில் வரவளிக்கப்பட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கல் கணக்கில் செலவிடப்பட வேண்டியுள்ள போதிலும், தேய்மானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, தேய்மான ஒதுக்கக் கணக்கில் செலவிடப்பட்டு இருந்தமையினால் மீளாய்வாண்டு இலாபம் மற்றும் சொத்துக்களின் தேறிய பெறுமானம் அப்பெறுமதியிலிருந்து குறைவாக காட்டப்பட்டிருந்தது. | இவ்வருடத்தில் இத்தவறுதலினை திருத்தப்படும். | கொடுக்கல் வாங்கலினை பிழையின்றி கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | 03 வாகனங்களின் கிரயங்கள் மற்றும் மீள் மதிப்பீட்டு பெறுமானம் | இவ்வித்தியாசத்தினை இவ் வருடம் திருத்தப்படும். | நிரந்தர சொத்துக்களின் கிரயத்தினை சரியாக |

| | | |
|---|---|---|
| ஆகிய இரண்டையும் வாகனங்களின் கிரயங்களாக கருதப்பட்டமையினால் நிரந்தர சொத்துக்களின் மீதி ரூபா 5,700,000 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | | இனங்கண்டு கணக்கிலிடப்பட வேண்டும். |

## 1.6 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் மற்றும் முகாமைத்துவ முடிவுகள் ஆகியவற்றுடன் இணங்காமை

| சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றின் கவனத்திற்கு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச்சட்ட மூலத்தின் 14(3) ஆம் பிரிவு | 2019, 2020 வருடங்களுக்கான வருடாந்த அறிக்கைகள் 2022 ஏப்ரல் மாதம் இறுதியாகியும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 வருடாந்த அறிக்கையினை அங்கீகார கவனத்திற்காக 2022.01.05 ஆந் திகதி நீதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2020 வருடாந்த அறிக்கையினை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு கொண்டு வருவதற்கு கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. | நிதிச்சட்ட மூலத்தின் 14(3) பிரிவின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) 1982 இலக்கம் 43 கொண்ட முத்திரை வரி சட்டமூலம் | ரூபா 25,000 மேற்பட்ட வழங்கலுக்காக ரூபா 25 முத்திரை வரி அறவிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 691,190 வழங்களுக்கான 14 வவுச்சர் பத்திரங்களுக்காக முத்திரை வரி அறவிடப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக ஒவ்வொரு மையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | 1982 இலக்கம் 43 கொண்ட முத்திரை வரி சட்டமூலத்தின் படி செயற்பட வேண்டும். |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய இலக்கம் பீஈடீ/12 கொண்ட பொது வியாபார சுற்றறிக்கையின் 9.12 ஆம் பிரிவு | சுற்றுநிருபத்தின் பிரகாரம் அனுமதியினை பெற்றுக் கொள்ளப்படாது ஆணைக்குழுவின் | இது தொடர்பாக அமைச்சினை அறிவுறுத்தப்பட்டுள்ளது. | பொது வியாபார சுற்றுநிருபத்தின் 9.12 பிரிவின் பிரகாரம் அது பற்றிய |

| | | |
|---|---|---|
| | ஊழியர் சார்பாக 2015 வருடம் தனிப்பட்ட காப்புறுதி திட்டம் ஒன்றினை ஆரம்பிக்கப்பட்டு மீளர்வாண்டிற்காக 56 ஊழியர்களுக்காக காப்புறுதி பங்களிப்பில் நூற்றுக்கு 50 ஆன ரூபா 1,466,321 தனிப்பட்ட காப்புறுதி கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | அனுமதியினை பெற்று செலுத்தலினை வழங்குவதற்கு செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவில் ரூபா 15,754,042 பற்றாக்குறை இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடம் பற்றாக்குறை ரூபா 21,323,099 ஆகும். அதன்படி நிதி விளைவில் ரூபா 5,569,057 விருத்தியொன்று அவதானிக்கப்பட்டது.அரச மானியம் மற்றும் பதிவுக்கட்டணப் பெறுவனவு ரூபா 2,692,256 ஆல் அதிகரித்தமை மற்றும் நிர்வாகச் செலவுகள் ரூபா 2,877,501 ஆல் குறைவடைந்தமை இந் நிதி விளைவில் விருத்திக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1987 இலக்கம் 27 கொண்ட சட்ட உதவி ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 4(ஐ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டஉதவி வழங்கப்படுவதற்கான ஏதேனும் ஒரு பிரிவு சம்பந்தமாக பரிட்சார்த்த நிகழ்ச்சித் திட்டங்கள், சட்டப் பிரச்சினைகள் தொடர்புடைய மையங்கள் மற்றும் திட்டங்கள் அமைப்பதனை கட்டுப்படுத்தல், அபிவிருத்தி செய்தல், மற்றும் அவைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல் மற்றும் அவ்வழுக்களுக்காக நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | சட்டமூலத்தின் நோக்கங்களை செயற்படுத்து வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திட்டங்களினை உண்டு பண்ணல் அபிவிருத்தி செய்தல் மற்றும் அவற்றினை அமுல்படுத்துவதற்கு தேவையான பணிக்குழாமினை சேவையில் ஈடுபடுத்தல் ஆகிய பிரதான அதிகாரங்களினை இதுவரையில் செயல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளினை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) அரசினது சட்டஉதவி வேலைத்திட்டங்களினை சிவில் சமூகத்தினுள் ஒழுங்குமுறையாக வழங்கப்படுதலினை நோக்காகக் கொண்டு 2016 மார்ச் 30 இலங்கைக்கான உத்தேச சட்ட உதவி கொள்கை எனும் பெயரிலான தேசிய கொள்கையினை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | சட்ட உதவி வேலைத்திட்டத்தினை உரிய முறையில் செயற்படுத்து வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சட்ட உதவியினை வழங்கும் பொருட்டு 2020 வருடத்திலிருந்து முன்கொண்டுவரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 36,567 ஆக இருந்ததுடன் 2021 வருடம் புதிதாக கோவை செய்யப்பட்ட 8,075 வழக்குகளுடன் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 44,642 ஆகும். அவற்றில் மீளாய்வாண்டில் 6,543 வழக்குகள் தீர்க்கப்படுவதற்காக வழக்கறிஞர்களின் உதவியினை (சட்ட உதவி) பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் 2021 | நீதிசார் செயற்பாடுகள் தனித்து மேற்கொள்ளப்பட முடியாத செயற் தொடராகும். வழக்குத் தாமதம் என்பது முழு நீதிசார் முறைமையினைக்கும் தாக்கத்தினை உண்டுபண்ணும் விடயமாவதுடன் சட்ட உதவி ஆணைக்குழுவில் இருக்கின்ற வழக்குகளில் நூற்றுக்கு 56 தாபரிப்பு வழக்குளாகும். தபாரிப்பு வழக்கொன்றாயின் | சட்டமூலத்தின் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதன் பொருட்டு செயலாற்றுகையினை விருத்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறாக 38,099 வழக்குகள் மீதி இருந்தன. அவை சேவையினை வழங்குவதற்கான மொத்த வழக்குகள் எண்ணிக்கையில் நூற்றுக்கு 85 சதவீதமாக இருந்தது. | கட்டாயமாக பிள்ளைகளுக்கு 18 வயது முடியும் வரையிலும் கல்வி கற்கும் பிள்ளைகளாக இருப்பின் அவர்கள் 25 வயதினை எய்தும் வரையிலும் வழக்கினை பேணிச் செல்ல வேண்டியிருக்கும். ஆகையால், வழக்குகளை முடிவுக்கு கொண்டு வரும் தரவு சம்பந்தமாக அவ்விடயங்கள் தீவிர தாக்கத்தினை உண்டு பண்ணும். | |

### 3.3 நிதியங்களின் குறைப்பாவனை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவினால் இலங்கை வங்கி புதுக்கடை கிளையில் நடாத்திவரும் நடைமுறைக் கணக்கில் 2021 சனவரி முதல் திசெம்பர் வரையில் 12 மாதங்கள் முழுவதும் ரூபா 1.8 மில்லியன் - ரூபா 8.7 மில்லியன் இடையிலான தொகையினை பிரயோசனப்படுத்தப்படாது இருந்ததுடன் அத்தொகையினை பயனுள்ள வகையில் பாவனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதியங்களைத் திட்டமிடுவது மற்றும் பாவனை செய்வது வினைத்திறனுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4(2) மற்றும் 4(2)(2) பிரிவின் பிரகாரம் குறைந்த பட்சம் 3 வருடங்களுக்காக தயாரிக்கப்பட வேண்டிய பெறுகைத் திட்டத்தினையும் மற்றும் மீளாய்வாண்டிற்கான விரிவான பெறுகை திட்டத்தினையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இதகைத்திற்குப் பிறகு குறைந்தபட்சம் 03 வருட காலத்திற்கான பெறுகை திட்டத்தினை தயாரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய விரிவான பெறுகை திட்டத்தினை தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் சிரேஷ்ட மட்டத்திலான வெற்றிடங்கள் 27 இரண்டாம் மட்டத்திலான வெற்றிடங்கள் 02 மூன்றாம் மட்டத்திலான வெற்றிடங்கள் 18 ஆரம்ப மட்டத்திலான வெற்றிடங்கள் 32 ஆக 79 வெற்றிடங்கள் நிலவியதுடன் இவ்வெற்றிடங்கள் ஆணைக்குழுவின் அலுவல்களினை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. | அத்தியாவசிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | சட்ட உதவி ஆணைக்குழுவில் கடமையாற்றிய இரு அதிகாரிகள் வெளிநாடு சென்று, 02 வருடங்களுக்கு முன்னர் கடமைக்கு அறிவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு அறிவிக்கப்படாமையினால் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 844,056 பிணைமுறித் தொகையினை தாபனக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 4.7 பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இத்தொகையை செலுத்துமாறு குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபனக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அத்தொகை அறவிடுவிடப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 கொண்ட | தொழிற்படு திட்டத்தினை காலாண்டு அடிப்படையில் | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய |

| | | |
|---|---|---|
| பொதுநிதிச் சுற்றுநிருபத்தின் வழகாட்டி இலக்கம் 12 பிரகாரம் தொழிற்படு திட்டத்தில் உட்பட வேண்டிய முன்னுரிமையின் படி மாதாந்த அடிப்படையில் தொழிற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் விளைவுகளினை சமர்ப்பிக்கப்பட்டு இல்லாததுடன் அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக இலக்குகளினை தயாரிக்கப்பட்டு செயலாற்றலினை கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | இலக்கினை முன்வைக்கப்பட்டுள்ளது. இதனகத்திற்கு பின்னர் மாதாந்த அடிப்படையில் இலக்கினை உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இலக்கம் 02/2020 கொண்ட பொதுநிதி சுற்றுநிருபத்தின் படி வருடாந்த தொழிற்படு திட்டத்தினை தயாரிக்கப்பட வேண்டியுள்ளதுடன் சம்பந்தப்பட்ட தொழிற்பாடு களுக்கான இலக்குகளினை இனங்கண்டு செயலாற்றலினை கணக்கிடப்பட வேண்டும். |

## 4.2 பேண்தகு அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பேண்தகு அபிவிருத்தி குறிக்கோள்களினை அடைவதற்கு தேவையான வளங்கள் மற்றும் கொள்ளளவினை பெற்றுக் கொள்வதற்கு இயலாது போனதன் இக்கட்டினை இனங்கண்டு அவற்றினை குறைந்தபட்ச மட்டத்தில் கொண்டுவருவதன் பொருட்டு முறையான திட்டத்தினை உருவாக்குதல், அதிகாரிகளை அறிவுறுத்தல் மற்றும் தேவையான தீர்வுகள் மற்றும் தீர்மானங்களை அமுல்படுத்துவதற்காக குழுவொன்றினை நியமிப்பது பற்றி கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதனை மேற்கொள்ளப்படவில்லை. | தற்போதைக்கு அக்குழுவினை ஏற்படுத்தப்பட்டு தேயையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | பேண்தகு அபிவிருத்தி நோக்கினை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |